செ.வெ.எண்-09 நாள்-06.01.2018

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாட்டிலுள்ள ஊரகம் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சி வரைவு வார்டுகள் மறுவரையறை கருத்துருக்கள் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் பொதுமக்களின் பார்வைக்கு தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பு அலுவலகங்கள் மற்றும் அரசு அலுவலகங்களில் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி வரைவு மறுவரையறை கருத்துருக்களில் திருத்தங்கள், ஆட்சேபணைகள், கருத்துக்கள் ஏதும் இருப்பின் அது குறித்தான விண்ணப்பங்கள் 02.01.2018-க்குள் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளின் வார்டு மறுவரையறை அதிகாரிக்கு Delimitation Authority) விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது.

மேற்படி கால அவகாசம் போதுமானதாக இல்லையென்று தெரிவித்து கூடுதல் கால அவகாசம் வழங்கக் கோரி அரசியல் கட்சிகள் மற்றும் பொது மக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகள் மறுவரையறை ஆணையத்தால் பரிசீலிக்கப்பட்டதை தொடர்ந்து அரியலூர் மாவட்ட எல்லை மறுவரையறை வரைவு மற்றும் கருத்துருக்கள் மாவட்ட இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. **ariyalur.nic.in** என்ற முகவரியில் வரைவு மற்றும் கருத்துருக்களை தெரிந்து கொள்ளலாம். வார்டு மறுவரையறை குறித்த ஆட்சேபணைகள் / கருத்துக்களை அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்கள் **12.01.2018 அன்று மாலை 05.45 மணிக்குள்** தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளின் வார்டு மறுவரையறை அதிகாரிக்கு (Delimitation Authority) எழுத்து மூலமாக நேரடியாகவோ அல்லது பதிவஞ்சலிலோ தெரிவிக்கலாம் என எல்லை மறுவரையறை அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.